## வைத்திய தரிசனம்.

# மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

### 3-ம் பிரிவு 18, 19-வது அத்தியாயம்.

மகாத்மா காந்தி "நவஜீவன்" பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது வரலாறு பின்வருமாறு:—

மதத்தின் பெயரால் காளிதேவிக்கு உயிர்ப் பிராணிகளைப் பலி கொடுத்ததை நேரில் பார்த்தது முதல் வங்காளியருடைய வாழ்க்கை முறையை அறிந்துகொள்ள வேண்டுமென்னும் ஆவல் எனக்கு உதித்தது. பிரம்ம சமாஜத்தைப்பற்றி நான் படித்துமிருந்தேன்; கேள்விப்பட்டுமிருந்தேன். பிரதாபசந்திர மஜூம்தாருடைய வரலாறும் எனக்கு ஒருவாறு தெரியும். அவர் பிரசங்கம் செய்த சில விடங்களுக்கு நான் போயிருந்திருக்கிறேன். அவர் எழுதியிருந்த கேசவ சந்திரசேனருடைய ஜீவியசரிதைப் புத்தகத்தை நான் வாங்கி மிகுந்த சிரத்தையுடன் படித்து சாதாரண பிரம்ம சமாஜத்திற்கும் ஆதிபிரம்ம சமாஜத்திற்குமுள்ள வித்தியாசத்தைத் தெரிந்துகொண்டேன். நான் பண்டித சிவநாதசாஸ்திரியைக் கண்டு பேசிவிட்டு ஆசிரியர் கத்தவேட்டுடன் மகரிஷி தேவேந்திரநாத தாகூரைப் பார்க்கப்போனேன். ஆனால் அக்காலத்தில் அவரைக் கண்டுபேச அனுமதிக்கப்படுவதில்லை. ஆகையால் நாங்கள் அவரைக்காண முடியவில்லை. இருந்தாலும் அவருடைய மாளிகையில் நடந்த பிரம்ம சமாஜத்தின் கூட்டமொன்றிற்கு என்னை அழைத்திருந்தார்கள். அப்பொழுது வெகு அருமையான வங்க சங்கீதத்தைக் கேட்கும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்தது. அதுமுதல் எனக்கு வங்காள சங்கீதத்தில் பிரியமிருந்து வந்திருக்கிறது.

பிரம்ம சமாஜத்தைப் பற்றி இவ்வளவு விஷயங்களைத் தெரிந்துகொண்ட பிறகு ஸ்வாமி விவேகானந்தரைப் பார்க்காமலிருக்க முடியவில்லை. ஆகவே மிகுந்த சிரத்தையுடன் நான் பேலூர் மடத்திற்குப் போனேன். முழுவழியும் நடந்து போனேனோ, பெரும் பாகம் நடந்து போனேனோ வென்பது இப்பொழுது எனக்கு ஞாபகமில்லை. மடமிருந்த இடம் வெகு அழகாக இருந்தது. ஆனால் ஸ்வாமி தேக அசௌக்கியமாக கல்கத்தா ஜாகையில் இருக்கிறாரென்றும், அவரைப் பார்க்க முடியாதென்றும் அங்கிருந்தவர்கள் சொன்னபொழுது எனக்கு மிகுந்த ஏமாற்றம் ஏற்பட்டது. பிறகு சகோதரி நிவேதிதா இருக்கும் இடத்தைத் தெரிந்துகொண்டு சௌரங்கியிலுள்ள ஒரு பெரிய அரண்மனையில் அவரைக் கண்டேன். அவரைச் சுற்றியிருந்த டாம்பீகங்களைக் கண்டு நான் கலங்கிப் போனேன். நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்த காலத்திலும் எங்களுக்குள் ஒற்றுமையான அபிப்பிராயமிருந்து வரவில்லை. இதை நான் கோகலேயிடம் சொன்னபொழுது எனக்குங் கிலேசமுற்ற அவருக்கும் அபிப்பிராய ஒற்றுமை இருந்து வருவது சாத்தியமில்லையென்று அவர் சொன்னார்.

நான் சகோதரி நிவேதிதாவை மறுபடியும் பெஸ்டோன்ஜீ பாதுஷாவின் ஜாகையில் பார்த்தேன். அவர் தமது தாயாருடன் பேசிக்கொண்டிருந்த காலத்தில் நான் அங்குபோய்ச் சேர்ந்தேன். ஆகவே நடுவில் மொழி பெயர்ப்பாளனாகிவிட்டேன். எங்கள் இருவருக்கும் அபிப்பிராயத்தில் ஒற்றுமையில்லாது போதிலும், ஹிந்து மதத்தினிடம் அவருக்கிருந்த அளவற்ற பக்தியை நான் பாராட்டாமலிருக்க முடியவில்லை. அவர் பல புத்தகங்களை எழுதியிருந்தது பிறகுதான் எனக்குத் தெரிந்தது.

என்னுடைய நேரம் முழுவதையும் தென்னாப்பிரிக்கா வேலை சம்பந்தமாகப் பிரமுகர்களைக் கண்டு பேசுவதிலும், கல்கத்தாவிலுள்ள மதஸ்தாபனங்களின் வரலாற்றை அறிந்துகொள்ளுவதிலும் செலவிட்டு வந்தேன்.

போயர் யுத்தகாலத்தில் இந்திய ஆம்புலன்ஸ் படை செய்த ஊழியத்தைப் பற்றி டாக்டர் மல்லிக்கின் அக்கிராசனத்தின் கீழ் நான் ஒரு பிரசங்கம் செய்தேன். "இங்கிலீஷ்மன்" பத்திராசிரியருடன் எனக்கு ஏற்பட்டிருந்த பழக்கம் இந்த சந்தர்ப்பத்திலும் எனக்கு உபகாரமாக இருந்தது. மிஸ்டர் ஸாண்டர்ஸ் அப்பொழுது தேக அசௌக்கியமாக இருந்து வந்தார். இருந்தாலும் அவராலியன்ற உதவியை அவர் செய்து வந்தார். எனது பிரசங்கம் கோகலேக்குப் பிடித்திருந்தது. டாக்டர் ராயும் அதைப் பாராட்டியதைக் கேட்டு அவர் சந்தோஷப்பட்டார்.

இவ்விதமாக கோகலேயுடன் நான் தங்கியிருந்ததில் கல்கத்தாவில் என்னுடைய வேலை சுலுவாக முடிந்துவிட்டது. பல பெரிய வங்காள குடும்பத்தினருடன் எனக்குப் பழக்கமேற்பட்டது. வங்காளத்துடன் எனக்கு நெருங்கிய பழக்கம் ஏற்படுவதற்கு இது அங்குரார்ப்பணமாக இருந்தது.

இந்த ஒருமாதத்தில் நடந்த வேறு பல சம்பவங்களை நழுவவிட வேண்டியதுதான். இருந்தாலும் நான் அவசரமாக பர்மாவிற்கும் அங்குள்ள புத்தபாதிரிகளிடத்திலும் போய்விட்டு வந்த வரலாற்றைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. அவர்களுடைய சோம்பேறித்தனத்தைக் கண்டு நான் வருத்தப்பட்டேன். பொற்கோயிலைப் பார்த்தேன். அங்கு சிறிய சிறிய மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டிருந்தன. எனக்குப் பிடிக்கவில்லை. கர்ப்பக்கிரகத்தில் எலிகள் நடமாடிக் கொண்டிருந்தன. மார்பியில் ஸ்வாமி தயானந்தருக்கு ஏற்பட்ட அனுபவத்தை எனக்கு ஞாபகப்படுத்தியது. பர்மா ஸ்திரீகளுடைய சுதந்திரத்தையும், ஊக்கத்தையும் கண்டு நான் சந்தோஷித்ததுடன் புருஷர்களுடைய சோம்பேறித்தனத்தைக்கண்டு வருத்தப்பட்டேன். நான் சுற்றுப்பிரயாணம் செய்த சொற்ப காலத்திற்குள் எவ்விதம் பம்பாய் இந்தியாவாகாதோ அவ்விதமே இரங்கூன் பர்மாவாகாதென்றும், இந்தியாவிலுள்ள நாம் பிரிட்டிஷ் வியாபாரிகளுக்குத் தரகர்களாகஎப்படி இருக்கிறோமோ அவ்விதமே நாம் பர்மாவில் பிரிட்டிஷ் வியாபாரிகளுடன் சேர்ந்துகொண்டு பர்மியர்களை நமக்குத் தரகர்களாக்கிக்கொண்டு விட்டோமென்றும் தெரிந்துகொண்டேன்.

நான் பர்மாவிலிருந்து திரும்பி வந்ததும் கோகலேயிடமிருந்து விடைபெற்றுக்கொண்டேன். அவரை விட்டுப் பிரிவது எனக்கு வருத்தமாகத்தானிருந்தது. ஆனால் வங்காளத்தில் என்னுடைய வேலை முடிந்துவிட்டது. ஒரு வேலையுமில்லாமல் அங்கு தங்கியிருக்க எனக்குப் பிடிக்கவில்லை.

நான் ஒரு இடத்தில் போய் நிலையாக உட்காருமுன் மூன்றாவது வகுப்பு ரயில் வண்டியில் இந்தியா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து, அந்த வகுப்புப் பிரயாணிகளுடைய கஷ்டங்களை அறிந்துகொள்ள விரும்பினேன். இதை நான் கோகலேயிடம் சொன்னேன். முதலில் அவர் இதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் நான் எதை அறிந்துகொள்ள விரும்புகிறேனென்பதைச் சொன்ன பிறகு அவர் இந்த யோசனையை ஒப்புக்கொண்டார். அப்பொழுது ஸ்ரீ காசியில் தேக அசௌக்கியமாகவிருந்த மிஸஸ் பெஸண்டைப் போய்ப் பார்ப்பதென்று நான் முடிவு செய்துகொண்டேன்.

இந்த மூன்றாவது வண்டியாத்திரைக்கு நான் மறுபடியும் தயார் செய்துகொள்ள வேண்டியிருந்தது. கோகலே ஒரு டிபன் பாத்திரத்தில் தித்திப்புப் பண்டங்களும், பூரியும் போட்டுக் கொடுத்தார். நான் 12 அணாவிற்கு ஒரு கெட்டுப் பையையும், ஒரு நீள கம்பளி கோட்டையும் வாங்கிக்கொண்டேன். அந்தப்பையில், இந்த சட்டை, ஒரு வேஷ்டி, ஒரு சவுக்கம், ஒரு ஷர்ட் இவைகளைப் போட்டுக்கொண்டேன். ஒரு கம்பிளியும், கூஜாவும் கையிலிருந்தன. இவ்விதம் செய்துகொண்டு யாத்திரை கிளம்பினேன். என்னை வழியனுப்பக் கோகலேயும், ராயும் ஸ்டேஷனுக்கு வந்திருந்தனர். நான் வரவேண்டாமென்று சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. "நீங்கள் முதல் வகுப்பில் பிரயாணம் செய்வதாக இருந்தால் நான் வரமாட்டேன்; இப்பொழுது வந்துதானாகவேண்டும்" என்று கோகலே சொல்லிவிட்டார்.

கோகலே பிளாட்பாரத்திற்குள் வரக்கூடாதென்று சொல்லுவார் எவருமில்லை. அவர் சட்டை, பட்டுத்தலைப் பாகையுடன் வந்தார். ஆசாரியராய் வங்க உடுப்பில் வந்தார். அவரை டிக்கெட் கலெக்டர் நிறுத்திவிட்டார். அவர் தமது நண்பரென்று கோகலே சொன்னபிறகு டிக்கெட் கலெக்டர் அவரை உள்ளே விட்டார்.

இவர்களுடைய ஆசியுடன் நான் யாத்திரையை ஆரம்பித்தேன்.

---

அருப்புக்கோட்டை
நாடார் குல மித்திரன் அதிபர்

## ஸ்ரீமான் சூ. ஆ. முத்து நாடார் அவர்கள்

இலங்கை விஜயத்தை முன்னிட்டுக் கூடிய
போதக்கூட்டத்தின் கண் வித்வ சிரோமணியாகிய
வடக்கன்குளம்,
ஸ்ரீமான் சி. கூ. சவரிமுத்துநாடார் அவர்களால்
பாடி அளிக்கப்பெற்ற

## வாழ்த்துப்பாக்கள்.

வெண்பா.

தன்னருப்புக் கோட்டைநகர் நாட்டிலுயர் நன்மணியே
பொன்னகர மாவிலங்கை பூவின் மு—நின்விஜயம்
சித்திபெற முத்தேசுனே சுத்தமு மஹாஜனக
ருத்துவனர் த்தவியே முத்துநீயே.

ஞான நன்மை—என்ற மெட்டு

(பல்லவி)

பாண்டி நாடார் பரம்பரை
பன்மை புகலும் பத்திராதிபா தீபா (பா)

(அனுபல்லவி)

வேண்டி நன் நாடார் குல மித்திரன் தன்னை
தாண்டி யாண்டோனு நீயே (பா)

(சரணம்)

வன்குலப் பெருமை தன்னை நன் தமையறிந்திடா
வன்னியர்க்கு பதேசித்து
பொன்குலப் பெருமைதன்னை புவியில்மிகவே யுரைத்த
பூபன் பத்திராதிபனே.

(முடுகு சந்தம்)

பத்திரிகை வளர் பெறவுழைத்தோனே
புத்திமிகும் முத்துநாடார் கற்கோனே

(அனுபல்லவி யெடுப்பு)

வித்தகர்போற்ற இலங்கை விஜயம்
விரித்தும் சவரி நேசா. (பா)

---

ஸ்ரீ ராமப்பாதம்லா—என்றமெட்டு

(கண்ணிகள்)

நாடார் குல மித்திரன் நாட்டியதீபனே
கானிலம் புகழும் நாயக தூபமே
நலமபுகல் நாடார்ஜன நாயக சிங்கமே (நா)
எடார்ப் பிரசங்கமே இனியப்பிரகாசனே
இன்னொளி வீசிடும் ஈடில்லா நேசனே
இத்தரையே முத்து இன்பவிலாசனே (நா)
திடசித்த ஞானந் திகழ்விசுவாசா
திருக்குல சவரிசொல் சூழும்பிரகாசா
திருமகள் அருள்வளர் செல்வக் நேசா. (நா)

---

ரோத்தே ரோத்தே என்ற இந்துஸ்தான் மெட்டு

கண்ணிகள்.

சுகுண வித்தே சுமன முத்தே
சுகிர்த லோல சுந்தரா
சாதி யபிமானம் பூண்ட
சன்மார்க்க விரதனே
பக்தி வளர் பரத புவி உயர் (சு)
மீதிலுறை மனோகரா
வித்தகரி னையு மின்ப
புத்திர பத்திராதிபா உயர் (சு)
சமத்வ நேசன் சைவ தாசன்
சவரி பாவின் வாசமே
சங்கல் பமா இங்கித பா
சாமணி விலாசனே. (சு)

---

## ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடார் ஞாபகார்த்த வாசகசாலை, காரைப்பேட்டை, தூத்துக்குடி.

இவ்வாசகசாலையின் ஆதரவில் ஓர் பொது மீட்டிங் நமது லைப்ரேரி ஹாலில் ஸ்ரீமான் அ. ச. நடராஜநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் இந்நகர் வக்கீல் ஸ்ரீமான் யல். ஆர். குருசாமி நாயுடு அவர்கள் "பகவத்கீதை" என்னும் பொருள் பற்றி சிறந்த சமஸ்கிருத சுலோகங்களுடன் வெகு தெளிவாக அதன் பெருமையை விளக்கி அகத்தியம் ஒவ்வொருவரும் அதை வாசித்துணர வேண்டுமென்று பேசி முடித்தார்.

முடிவுரையாக அவைத் தலைவர் அவர்கள் பிரசங்கியார் அவர்களின் கருத்தைத் தழுவி பகவத்கீதை, பகவான் உலகத்தில் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்த ஓர் புண்ணிய சரித்திரம் என்று விரித்துரைத்து எல்லோரும் பகவத்கீதையை வாசித்து அதினின்றும் ஆதம ஞானத்தை அடைய ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டுமென்று கூறி முடித்தார்கள்.

பின் காரியதரிசியவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டு அக்கிராசனருக்கும், சொற்பொழிவாளரவர்களுக்கும் புஷ்ப ஆரஞ் சூட்டப்பட்டு கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது கலைந்தது என்றும்,

பின்னர் ஷை வாசகசாலையின் ஆதரவிலேயே 10-4-27-ல் ஸ்ரீமான் என். எஸ். நெல்லையப்ப நாடார் அவர்களின் தலைமையின் கீழ் ஓர் பொதுக் கூட்டம் கூடி, ஸ்ரீமான் கே. ஆறுமுக நாடாரவர்கள் "கர்ணனின் தியாகம்" என்பது பற்றியும், ஸ்ரீமான் மு. பெ. மாரியப்ப நாடாரவர்கள் "சல்லியன் தியாகம்" என்பது பற்றியும் விளக்கமாகப் பேசி முடித்து அவைத் தலைவருக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்த தென்றும் காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## சுயமரியாதைக்கு உயிர் நீத்த சுத்தவீரன்.

"பார்ப்பனர் கீழ் வேலை செய்வதைக் காட்டிலும் சாவதே மேல்."

செங்கல்பட்டு ஜில்லா பொன்னேரியில் காஞ்சீபுரம் ரிட்டயர்டு சால்ட் சப் இன்ஸ்பெக்டருடைய குமாரரான பி. சுப்பிரமணிய முதலியார் என்கிற 22-வயதுள்ள ஒரு வாலிபர் ஒரு பார்ப்பனருக்குக் கீழ் இருந்து வேலை செய்வதைப் பார்க்கிலும் செத்துப்போவதே மேல் என்பதாகக் கருதி தன்னுடைய நண்பர் ஒருவருக்குக் கீழ்கண்ட விதமாக ஒரு கடிதம் எழுதிவைத்து விட்டுப் பாஷாண சம்பந்தமான மருந்தைச் சாப்பிட்டு, உயிர் துறந்தார்.

அக்கடிதமாவது:—

பொன்னேரி லோகல்பண்டு ஆஸ்பத்திரி, 7—4—27.

அன்புமிக்க மாணிக்கம்,

இம்மாதம் 8-தேதி எனக்கு குறிப்பிடத்தக்க ஒரு அதிஷ்ட வசமான நாளாகும். அது என்னவென்றால் நான் இந்த உலகத்தையும், உன்னையும், எனது பந்துக்களையும் விட்டு சந்தோஷமாகவும், திருப்தியாகவும் பிரியும் நாளாகும்.

ஒரு பார்ப்பன எஜமானன் கீழ் இருந்து வேலை செய்ய இனி என்னால் முடியாது. பார்ப்பன எஜமானன் கீழ் வேலை செய்து ஜீவிப்பதைக் காட்டிலும், செத்துப்போவது மேலானதெனவும், புத்திசாலித்தனமானதெனவும் நான் தெரிந்து கொண்டேன்.

என்னுடைய பார்ப்பன எஜமானனுடைய பெயர் உனக்குத் தெரிந்ததுதானே. அந்த ஸ்ரீநிவாசப் பிரபு என்பவர், என்னையும், மற்றும் உள்ள சிப்பந்திகளையும் பார்ப்பன ஆதிக்கத்திற்காக உழைக்கிற தேவதேசசாமி என்கிற ஒரு பார்ப்பனரின் இஷ்டப்படியும், அவர் சொல்லுகிறபடியும் நடத்துகிறவராயிருக்கிறார். இதுவரை டாக்டர் நாயர், சர். பி. தியாகராய செட்டியார், ஏ. ராமசாமி முதலியார், வி. நடேச முதலியார் முதலியவர்கள் பார்ப்பனர் கொடுமைகளை அடியோடு தொலைப்பதற்காகச் செய்து வரும் பிரயத்தனங்களைத் தப்பிதமென்று நினைத்திருந்தேன். ஆனால், இப்போது அத்தலைவர்கள் வார்த்தைகள் ஒவ்வொன்றும் சத்தியமானது என்பது என் விஷயத்தில் மிகவும் ருஜுவாகி விட்டது. பார்ப்பனர்களை வெறுப்பதாலாவது பார்ப்பனர்களின் கீழ் வேலை செய்யக்கூடாது என்று நினைத்து என் வேலையை ராஜிநாமாச் செய்து விடுவதினாலாவது வேறு வழியில் இந்த நாட்டில் பிழைக்க முடியாதவனாயிருக்கிறபடியால் ஒரு கோப்பைப் பாலில் ஒரு அவுன்சு ஹைட்ரோஸயானிக் ஆஸிடைக் கலந்து சாப்பிட்டு உயிரை மாய்த்துக் கொள்வதையே விரும்புகிறேன். ஆதலால் நான் ஒரு உண்மையான பார்ப்பனரல்லாத உணர்ச்சியுடையவனாகவும் என் து பார்ப்பனரல்லாத சகோதர சகோதரிகள் பார்ப்பனக் கொடுமையிலிருந்து நீங்குவதற்காக அப்பார்ப்பனக் கொடுமையை அழிக்க வேண்டியும் நான் பிராணனை விடுகிறேன். நான் செய்யும் இக்காரியம் சரிதானே? இந்த விஷயத்தை மெயில் பத்திரிகையிலும் ஜஸ்டிஸ் பத்திரிகையிலும் பிரசுரிக்கச் செய்வதால் நமது சகோதரிகளையும் சகோதரர்களையும் பார்ப்பனச்சூழ்ச்சியில் சிக்கி ஏமாறாமலிருப்பதற்காகவிருந்து தப்புவிக்க உதவும் என நினைக்கிறேன். எனனிடத்திலும் என் அன்பு நிறைந்த சிநேகிதர் ஸ்ரீமான் வி. வி. மல்லிநாத ஜெயின் இடத்திலும், எம். எஸ். எம். ரயில்வே பாக்காலா ஜில்லா இஞ்ஜினீர் ஆபீசு டைப் அடிப்பவரிடத்திலும் விடை பெற்றுக் கொள்ளுங்காலம் நெருங்கி விட்டது. இதோடு நான் கல் விடைபெற்றுக்கொள்ளுகிறேன். இனி நீ பார்க்க முடியாததானவன்னுடைய கடைசி ஷக

## ஆதித்தர் கடிதம்.

நல்லூர் வாழ் மக்கட்கு

(அருப்புக்கோட்டை சைவபானு க்ஷத்திரிய ஹைஸ்கூலில் தமிழ்ப் பண்டிதராய் இருந்து தற்போது சென்னை "தமிழ்நாடு" பத்திரிகைக்கு உதவி ஆசிரிய பதவியிலிருக்கும் காயாமொழி ஸ்ரீமான் அ. குமரகுருபர ஆதித்தரவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்.)

நல்லூர் பெரியீர்! தாங்கள் என் மீதுற்ற அன்பிற்கும், அபிமானத்திற்கும் மிகுந்த நன்றி செலுத்துகிறேன். தங்களின் பெருமை, மக்களால் வெளிப்பட்டது. அவர்களைப் போற்றுவேன்.

என் வாலிப சோதரரே! தங்களில் என்னை விரும்பாதவர் ஒருவர் கூட இல்லை என்று எனக்கு நன்கு தெரியும். தங்களில் ஒவ்வொருவரும் என்னை தன்னைப் போன்றே கூறின் தன்னை விடக் கண்ணியமாகவே கருதி நடத்தி வந்தீர்கள். சன்மார்க்க வாலிபர் குழாமுள்ள இந்த நல்லூரை விட்டு யான் பிரிகதது எனது தீர் அதிஷ்டமேயாகும். தமியேன் ஆங்கு நடந்து கொண்டவிடயத்தில் யாதேனும் பிழையுளதேல் மன்னித்தருடா வேண்டுகிறேன்.

பிரிய மாணவரே!

இனி எக்காலம் நான் உங்களைப் போன்ற உத்தம பால்ய நண்பர்களைப் பெறப் போகின்றேன். நீங்களும், நானும் உள்ளஞ்சேர்ந்திருக்கும் உயரிய நட்பைப் பெற்றிருந்தோம். உங்களுக்காகவே நான் வாழ்ந்தேன்; எனக்காகவே நீங்கள் இன் முகமும், இன் குணமும், இன் சொல்லும் படைக்கப்பட்டிருந்தீர்கள். யாதி செய்வோம்! ஈசன் பிரித்து வைத்திருக்கிறார். உங்களுக்கு வாணி சகாயம் மேன்மேலும் பெருகுமாறு இறைஞ்சுகின்றேன். நான் கூறிய 1. கசடறக் கற்க; 2. புகழொடு தோன்றுக; 3. "மகன் றந்தைக் காற்று முதவி இவன் றந்தை என்னோற்றான் கொல் எனும் சொல்" என்பதை தினம் ஒரு முறை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். இவ்வருடத்தில் யாவரும் பரீட்சையில் தேறிவிட வேண்டும். உங்கள் சகோதர உணர்ச்சியை வலுப்படுத்த வேண்டும். ஒழுக்க சீலர்களாய் வாழ வேண்டும். இதுவே நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய உதவி. மற்றவை பின்னர்.

பெமுசதுஇதுதான். என்னுடைய பிரேதத்தைப் பார்ப்பன தெருவுக்குமுன்னால் ஓடும் ஆரணி நதி மணலில் பார்க்கலாம்.

என்னுடைய சம்பளப் பாக்கியை நீ எனக்காக வாங்கி ஒட்டல்காரருக்கும் மற்றும் நான் கொடுக்கவேண்டிய கடன்காரருக்கும் கொடுத்துவிடு.

(ஒம்.) பி. சுப்பிரமணியன்.

(நகல்.)

## அருப்புக்கோட்டை மகாத்மா காந்தி கதர் கைத்தொழில் அபிவிருத்தி சங்கம்.

சரித்திர பூர்வமாக நெசவு கைத்தொழிலுக்குத் தென்னாட்டில் பேர்போன இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டையில் தற்போது மகாத்மா காந்தியடிகள் உபதேசித்துவரும் கதர் கைராட்டினத் தொழிலை ஆரம்பம் செய்து தென் பாகத்தில் கதர் அபிவிருத்தி செய்ய ஏதுகரம் அதிகமிருப்பதை உத்தேசித்து இவ்வூர் அபிமானிகள் பலரால் நாளா வட்டத்தில் கூட்டம் கூடி ஷை சங்க ஸ்தாபன விஷயமாய் யோசிக்கப்பட்டுவந்தது. எல்லா சமூகத் தலைவர்களும் இதில் பங்கெடுத்துக் கொள்ள ஆர்வங்கொண்டிருந்ததற்கிணங்க நாளது பிரபவ ஸ்ரீ சித்திரை மீ 10 உ. யன்று சொக்கலிங்கபுரத்தில் ஸ்ரீமான் செ. வீர சு. பு. வீரய்யா செட்டியார் அவர்கள் கட்டடத்தில் மேற்கண்ட சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றது.

இச்சங்கத்தில்சகலத்தினரும்ஈடுபட்டுழைக்க வேண்டிய காரணங்கொண்டு பங்கு ஒன்றுக்கு 5 ரூபாய் வீதம் 1000 பங்குகள் சேர்ப்பதென்றும், ஆரம்பத்தில் பத்து இராட்டும், இரண்டு நெசவுத் தறியும் ஏற்படுத்தவதென்றும், பின்னால் நாளாவிர்த்தியில் இச்சங்கத்தை அபிவிருத்தி செய்து கூடுதலான வேலைகை நடத்துவதென்றும் அபிமானிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

22—4—27-ல் காலை 9½ மணிக்கு இச்சங்கத்தில் புதுக் கணக்குப் போட்டு வேலை ஆரம்பமானது. அங்கு கூடியிருந்தவர்களே சுமார் 150 பங்கு வரை எடுத்துக் கொண்டனர். பின் ஸ்ரீமான் அ. கு. சித. சிவசுப்பிரமணிய முதலியார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஒரு கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீமான் தி. கருப்பையா பிள்ளை அவர்கள் இச்சங்கத்தின் நோக்கத்தைப் பற்றியும், இதை சகலரும் ஆதரிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் வெகுவாய் எடுத்துரைத்தார்கள். அக்கிராசனரவர்களும் தமக்குள்ள அனுதாபத்தையும், அனுபவத்தையும், சகலரும் பங்குகள் எடுக்க வேண்டிய அத்தியாவசியத்தைப் பற்றியும் எடுத்துரைத்து அனைவரையும் பங்கு எடுக்க இவ்வைபவத்திற்கு வேண்டிக்கொண்டனர். இவ்வூரிலுள்ள அனைத்து ஜன சமூகத்தினரும் விஜயம் செய்து சிறப்பித்தது போற்றற்குரியது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

நெருங்கிவிட்டது! நெருங்கிவிட்டது!!

நாடார்குல மித்திரன் க்ஷேமநிதித்

தர்ம லாட்டரி.

மகாஜனங்களே!

முதல் பிரைஸ் ரூ 3000

அடைய ஆசையுண்டா? அப்படியானல் இன்றே ஒரு ரூபாய் செலுத்தி சீட்டுப்பெறுங்கள். அதிஷ்டம் உங்கள் புறமிருந்தால் ரூபாய் மூன்று ஆயிரமும் கட்டாயம் உங்களுக்கே கிடைக்கும். அதிஷ்டத்தைக கைவிடாதீர்கள்! கைவிடாதீர்கள்!! மித்திரனுக்கு க்ஷேமமும், உங்களுக்கு விசேஷலாபமும் உண்டு.

நாடார் ஊழியப் பிரசுரசபையார், மதுரை.

பத்து நாட்கள் தான் இருக்கின்றன!

லாட்டரிச்சீட்டுவிற்பவர்களைத் தூண்டுங்கள்.

விற்றவைகளை அனுப்புங்கள்.

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

### கௌன்ஸில் கூட்டம்.

நமது சங்கம் கவுன்ஸிலின் ஸ்பெஷல் மீட்டிங்கு 1927-ஸ்ரீ ஏப்ரில் மீ 30உ (பிரபவ-ஸ்ரீ சித்திரை மீ 18உ) சனிக்கிழமை மாலை 4-மணி முதல் சங்கம் ஆபீஸில் நடைபெறும்.

மீட்டிங்கிக்குத் தாங்கள் விஜயஞ் செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம.

ஆலோசிக்கப்படும் விஷயங்களாவன:—

1. 1927-ஸ்ரீ மார்ச்சு மீ 31உ யோடு முடிந்த மூன்று மாதத்தில் வேலைகளையும், வரவு செலவுகளையும் பற்றிய ரிப்போர்ட்டைக் கவனித்தல்.

2. 12—3—27ல் கூடிய கவுன்ஸில் மீட்டிங்கின் தீர்மானப்படி கட்டடங்கள் வாங்குவதற்காக நியமித்த கமிட்டி மெம்பர்கள் செய்திருக்கும் ரிப்போர்ட்டைக் கவனித்தல்.

3. 1925—26, 1926—27-ஸ்ரீத்துக் கணக்குகளை பரிசோதிப்பதற்காக ஆடிட்டர்களை நியமித்தல்.

4. காரியதரிசிகளால் கொண்டுவரப்படும் இதர விஷயங்களைக்கவனித்தல்.

தவிர சங்கத்தின் உபவிதிகளை அனுசரித்து அங்கத்தினர்கள் கொண்டுவரும் தீர்மானங்களும் கவனிக்கப்படும்.

மேற்கண்ட விஷயங்கள் ஆலோசிக்கப்பட்ட பின்னர், அங்கத்தினர்களுடைய கேள்விகளுக்கு விடையளிக்கப்படும்.

பா. ம. பாண்டியநாடார்,
ஆ. அ. ஆறுமுகநாடார்,
காரியதரிசிகள்.

## தரங்கம்பாடி.

### சட்டமெம்பர் அவர்களுக்கு வரவேற்பு.

12—4—27 மாலை 4-மணிக்கு கனம் ஸர். வி. பி. இராமசாமிஅய்யர் நாகப்பட்டணமிருந்து தரங்கம்பாடி நாடார் பங்களாவிற்கு வந்து சேர்ந்தார். பங்களாவில் கனம் வெ. பாலகுருசாமிநாடார், பாரிஸ்டர் சுப்பிரமணியஞ்செட்டியார், பங்காளம் நாராயணசாமிநாயுடு இவர்களால் மலர் மாலை சூட்டப்பெற்று மேளவாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டு பங்களாவின் மாடிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சிற்றுண்டி விருந்திற்குப் பிறகு ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. உத்தியோகஸ்தர்களும் பிரபுக்களும் ஏராளமாய்க் கூடியிருந்தார்கள்.

ராவ்பகதூர் சுப்பிரமணிய பந்துலு அவர்கள் வி. பி. அவர்களின் அரும் பெருங்குணங்களை எடுத்துச்சொல்லி தரங்கம்பாடியை பூர்வீக நிலைமைக்குக் கொண்டுவந்துஜில்லாகோர்ட்டு முனிசிப் கோர்ட்டு ஸ்தாபிதம் செய்ய வேண்டுமென்றும் ஏற்றுமதி இறக்குமதிப் பட்டணமாகச் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

ஸ்ரீமான் கனகசபைநாடார் அவர்கள் தரங்கம்பாடி மகாஜனங்களின் சார்பாக கனம் மெம்பருக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுத்தார்.

கனம் வி. பி. அவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே எழுந்து தன்னை இவ்விடம் அழைத்து விருந்தளித்து நல்வரவு கூறினதற்குத் தான் அதிகச் சந்தோஷப்படுவதாகவும் தரங்கம்பாடி சுகாதாரத்திற்குத் தகுந்த இடமென்றும் அதை பூர்வீக நிலைமைக்கு கொண்டுவருவதில் தன்னாலியன்ற உதவி செய்வதாகவும் நாடார்குடும்பம் செழுமையாகவும் வியாபித்தும் பூர்வஸ்திதிக்கு வரவேண்டுமென்று தான் விரும்புவதாகவும் சொல்லி ஆசனத்தில் அமர்ந்தார்.

ஸ்ரீமான் பாரிஸ்டர் அவர்களால் வந்தன உபசாரஞ் சொல்லப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

இரவு 7-மணிக்கு கனம் மெம்பர் மாயவரம் பிரயாணமாகிவிட்டார்.

எஸ். நமசிவாயநாடார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார்குலமித்திரன்

பிரபவ ஸு சித்திரை மீ ௰௩ உ

## நமது சந்தாதார்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நமது "நாடார் குல மித்திரன்" நமது நாடார் சமூக நன்மையையே பெரும்பாலும் கவனித்து வேலை செய்ய வேண்டியதிருக்கிறதென்பதும், நாடார் குலச் சந்தாதார்களின் ஆதரவினாலேயே அது வளர்ச்சியடைய வேண்டியதிருக்கிறதென்பதும் எல்லோரும் அறிந்த விஷயம். இதுகாறும் அப்படியே தான் நடந்து வந்திருக்கிறது; இனி மேலும் அப்படித்தான் நடக்கவுங் கூடும். இதனாற்றான் தன் கால்ப்பலத்தினாலேயே தளராமல் நின்று சாதிக்கும் இயல்புள்ள மித்திரன் என்று சாற்றினர் "குடியரசு" ஆசிரியர் ஸ்ரீமான் ஈ. வி. இராமசாமி நாயக்கரவர்கள்.

பொதுவாக எந்தப் பத்திரிகைகளும் சந்தாதார்களின் ஆதரவினாற்றான் விருத்தியடையக் கூடும் அதில்லையானால் அதுவுமில்லையென்பதை நாம் அனுபவத்தில் எத்தனையோ கண்டிருக்கிறோம். சந்தாதார்களின் ஆதரவு கிடைப்பதற்கும் தகுதியான வழியில் பத்திரிகையும் நடக்க வேண்டியதிருக்கிறது. அவ்வாறு நடக்கிறதற்கும், நடைபெறுகிறதற்கும் சந்தாதார்களின் தொகையும் வரவர வளர்ந்து கொண்டே போனாற்றான் நடைபெறுவதற்கு உற்சாகமாகவும், உதவியாகவுமிருக்கக் கூடும்.

நமது "நாடார் குல மித்திரன்" ஏற்பட்ட பிறகு ஜனங்களுக்குள் பத்திரிகை படிக்கும் உணர்ச்சி அதிகரித்திருப்பதுடன் தேசிய ராஜீய சமுதாய அபிலாஷையால் இன்னும் விரிவான விஷயங்களை எதிர்பார்ப்பது சகசமாயுமிருக்கிறது. அதை நாம் திருப்தி செய்து வைக்க வேண்டியதும் அவசியமாயுள்ளது. அதனால் நாம் கை நஷ்டமடையாமற் பார்த்துக் கொள்வதுங் கடமையாயிருக்கிறது. இவைகளை யெல்லாமுத் தேசித்துத்தான் ஓர் பண்டு வேண்டுமென்று லாட்டரியை ஆரம்பித்தோம். நமது சந்தாதார்கள் தலைக்கொரு புஸ்தகம் பூர்த்தி செய்து கொடுத்தாலும் நிறைவேறி விடுமென்ற தைரியத்தைக் கொண்டு தான் இவ்விஷயத்திலீடுபட்டோம். அவ்வாறே ஒவ்வொருவருக்கும் சீட்டுப் புஸ்தகங்களை அனுப்பி பூர்த்தி செய்தனுப்பும்படி இன்னும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதுவரையும் இதா பத்திராசிரியர்களின் உதவியால் விலாசங் கிடைத்த கனவான்களிடமிருந்துதான் அதிகமாகப் பணங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதுபோல் நமது சந்தாதார்களிடமிருந்தும் குறிந்த காலத்திற்குள் அதிகமாய் வந்து சேரக் கூடுமென்றுதான் எதிர்பார்க்கிறோம். மித்திரனின் நற்பேர் சந்தாதார்கள் செய்யும் உதவியைப் பொறுத்தே இருக்கிறது. மதுரையில் நாடார் மகாஜன சங்கம் காரியதரிசிகளும், ஊழியப்பிரசார சபை உத்தியோகஸ்தர்களும், ஸ்ரீமான் வெ. பெ. இரத்தினசாமி நாடார், கந்தசாமி நாடார், "வாலிப நாடார் சங்கம்" தலைவர் ஸ்ரீமான் பெரியசாமிநாடார் முதலிய பல கனவான்கள் மதுரையில் நமது லாட்டரி வெற்றிக்குரிய முன்னேற்பாடுகளுடன் ஒத்தாசை செய்வதாக அன்பு கூர்ந்ததானது மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. இதுபோல் ஒவ்வொரு ஊரிலுமுள்ள கனவான்களும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

பிரைஸ் எடுப்பதாகக் குறிப்பிட்ட நாட்கள் இன்னும் பத்துத் தினங்களேயிருக்கின்றன. குறிப்பிட்ட தினத்தில் பிரைஸ் எடுப்பதாகவே சர்வ முயற்சிகளும் வெகு துரிதமாய்ச் செய்து கொண்டிருக்கிறோம். உசிலம்பட்டி, தேனி, ஆண்டிபட்டி, சின்னமனூர், போடிநாயக்கனூர் முதலிய இடங்களுக்கு நமது ஏ. எம். எல். அண்ணாமலை நாடாரை அனுப்பி யிருக்கிறோம். தூத்துக்குடி, கோயில்பட்டி, சாத்தூர், சிவகாசி, விருதுநகர், திருமங்கலம் முதலிய இடங்களுக்கு நமது வகைபாட்கள் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள். ஆங்காங்குள்ள சந்தாதார்களும், மற்றும் கனவான்களும் ஒத்தாசை செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். பிற இடங்களிலுள்ள சந்தா நண்பர்களும் தங்கள் தங்களுக்கு அனுப்பியிருக்கும் சீட்டுப் புஸ்தகங்கள் பூராவும் விற்பனையாகவில்லையென்றாலும், விற்றவரையுமாவது தங்கள் தங்கள் சக்திக்கு இயன்றவரையாவது சீட்டுகள் எடுத்துக் கொண்டு பணத்தையும், கவுண்டர் பாயிலையும் தாமதமின்றி அனுப்பும் வண்ணம் மீண்டும் வேண்டிக்கொள்ளுகிறோம். பிரைஸ் எடுக்கும் தினத்தில் மாலைவரையும் சந்தாதார்களுடைய வரவை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தே பிரைஸ் எடுக்க ஆரம்பம் செய்வதாகவும் உத்தேசித்திருக்கிறோம்.

ஆகையால் எல்லோரும் வந்திருந்து லாட்டரியை வெற்றி பெறச் சிறப்பாய் நடத்திவைக்கவும் கோருகிறோம். நேரில் வர முடியாதவர்கள் உடனே பணமும், கவுண்டர்பாயிலும் தபாலில் அனுப்பிக் கொடுக்கும்படியும், மித்திரனுடைய அபிவிருத்தியில் சிரத்தை கொண்டு உழைக்கும் தங்கள் நண்பர்களிடத்தில் புஸ்தகங்களிருந்தால் அவர்களையும் சீக்கிரம் பணமும், கவுண்டர் பாயிலும் அனுப்பி வைக்கும்படி தூண்டுதல் செய்யும்படியும் மறுபடியுங் கேட்டுக் கொள்கிறோம்.

---

## உள்ளதைச் சொல்லிக் கெட்ட பண்டாரம்.

நாளது ஏப்ரல்மீ 15உ சர்வ தேசங்களிலும் மஹா புண்ணிய புருஷன் ஒருவரின் மரணத்தைத் தியானஞ்செய்து கொண்டிருந்திருப்பார்கள். இவ்வித ஞாபகார்த்தமாகக் கூட்டப்பட்டுள்ள கூட்டமொன்றில் நாமும் கலந்துகொண்டோம். அநேக வருஷங்களாய்க் கேள்விப்பட்ட முறையில் பெரியாரது வன்கொலை வர்ணித்துக்கூறப்பட்டது. இத்தியானத்திற் சேர்பட்ட காலமோ சுமார் 3-மணி நேரங்களாகும். ஆகவே அவ்வேழரை நாழிகைக்கிடையே மஹான் ஏன் கொலையானார்; கொலையானலுங் கூட ஏன் சித்திரவதை செய்யப்பட்டார்; அவரை இவ்விதம் வதை செய்யும்படியான பகைமையும் மூர்க்கமும் கோபமும் அவரைக் கொன்றாருக்கெங்கிருந்துண்டானது. என்னும் சிந்தனையிலாழ்ந்து நின்றோம். இக்கேள்விகளுக்கு நமது மனோ உணர்ச்சியில் சில விடைகள் கிடைக்கப்பெற்றன. ஆகவே அதிசாதாரணமாய் நமக்குத் தெரிந்துள்ள பெரியாரின் சரித்திரத்தினின்றும் கால சங்கற்பத்திற்கேற்ப ஸ்ரீதனமான விஷயங்களைக் கேள்விப்பட விரும்பும் எம்போன்ற அப்பெருமானின் தொண்டர் பொருட்டு அவ்விஷயங்களை ஈண்டு குறிப்பிடலானோம்.

இவரைக் கொலைசெய்வதற்கு அக்காலத்திலிருந்த ராணுவ அதிகாரிகளும் மார்க்க ஆச்சாரியர்களுமே முக்கிய காரணராயிருந்தார்கள். ஏன்-சேவுகர்களையும் உத்தியோகஸ்தர்களையும் நீங்கள் ஒருவனுக்கும் இடுக்கண் செய்யாமலும் அநியாயம் செய்யாமலும் லஞ்சம் வாங்காமலும் உங்கள் சம்பளமே போதுமென்றிருங்கள் என்று போதித்தவர்களும் கண்டித்தவர்களும் இவரும் இவரது சிஷர்களுமேயாவர். ராஜா தன் சகோதரன் மனைவியை எடுத்து வைத்துக்கொண்டது நியாயமல்லவென்று கடிந்து கூறியது இவரது கட்டியனேயாகும். அக்காலத்து ஆச்சாரியர்களைப்பார்த்து நீங்கள் பார்வைக்கு மிகவும் சன்மார்க்கரைப்போல் விளங்குகிறீர்கள்; ஆயினும் உங்கள் மனமோ வஞ்சகத்தாலும் பொறாமையாலும் சகல தகாத சிந்தனையாலும் நிறைந்திருக்கிறது; மற்றவர்கள் வெளிப்படையாய்ச் செய்து கண்டிக்கப்படுகிற பாதகச்செயல்களை நீங்கள் ரகசியமாய்ச்செய்து உங்களது செல்வாக்கினால் மறைத்துக் கொள்ளுகிறீர்கள். மொத்தத்தில் நீங்கள் வெள்ளையடித்து அலங்காரம் பண்ணப்பட்ட கல்லறைக் கொப்பாயிருக்கிறீர்கள் என்று கண்டித்தவர் இவர்தான். உயர்ந்த வஸ்திரங்களை உடுத்தி அழகிய அரண்மனையில் வீற்றிருந்து பெண்டு பிள்ளைகளுடன்கூடிக்குலாவி வாழும் குருவைவிட காடோடியாய் அலைந்து தம்போன்ற மானிடருக்குத் தன்னாலியன்ற உதவிசெய்யும் இயல்புடையோனே சிறந்த போதகனாகும் என்று போதித்தவர் இவர்தானாகும். இவ்விதமான உபதேசங்களைப் பல வருஷங்களாய் சகித்து வந்தவர்களுக்கு திடீரென்று உண்டான மூர்க்கம் என்ன? கோபம் என்ன? ஜனங்களெல்லாரும் ஞாயிற்றுக்கிழமையில் அவரை ராஜகௌரவத்துடன் வரவேற்றார்கள். கோவிலுக்குப் போனார் கோவில் சந்நிதிப்பக்கங்களில் பண்டிகையின் விற்பனைக்கென்று கட்டப்பட்டுள்ள பல கடைகளைக்கண்டார். கோவிலுக்குள் கடை கூடாதென்று கண்டித்தார். அப்புறப்படுத்தினார். இதனால் வியாபாரிகள் மிகுதியும் நஷ்டப்படாவிட்டாலும் அவர்களிடம் விசேஷ தொகைகளை வாடகையாகவும் இனாமாகவும் பெற்றனுபவித்த ஆலய வேலைக்காரருக்கும் போஷீசாரான ராணுவச் சேவகர்களுக்கும் பெரிய ஏமாற்றமாகத் தெரிந்தது. பெரிய குருக்களுக்கோ தம்மைப்பற்றிய மதிப்புவாக்குச் சுத்தமும் வியாபாரிகளுக்குள் கெட்டுப்போய் விட்டதென்று கலங்கினார்கள். இவனைத் தொலைத்து விட்டே பண்டிகை கொண்டாட வேண்டுமென்று தீர்மானித்துவிட்டனர். வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டது. ஜனங்களின் கோபமும் ஆத்திரமும் அன்றைக் கோரமாயும் க்ரூரமாயும் மிலேச்சத்தமையாயும் கொலை செய்ய ஆவல்கொள்ளக்கூடிய நிலைமையில் பக்குவமாய் எரிந்துகொண்டிருந்தது. தலைநாளின் விதிப்படியே முடிந்து தீர்ந்தது. இதனைச் சிந்தனைசெய்யும் நம்மவர்களுக்கு இச்சரித்திரம் போதிப்பதென்ன? நாம் இன்று நம்முடைய சுய தேசத்திலும் இதர நாடுகளிலும் இவ்வித சம்பவங்கள் திருப்பத் திரும்ப நேரிடுவதைக் காண்கிறதில்லையா? நமது தேசத்திலும் தென் ஆப்பிரிக்காவிலும் மஹாத்மா காந்தி சிறையானார்கள். ஸ்வாமி சிரத்தானந்தர் தம்மால் தாக்கீர்க்கப்பட்ட குருபியொருவன் கையால் மாண்டார். வங்காளத்தில் ஏராளமான வாலிபர்களும் பெரியாரும் தம் இல்லங்களிலிருந்தும் பிரிக்கப்பட்டு சிறைவாசம் செய்து வருகின்றனர். சீன தேசத்து சன்எற்சென் என்பவரைப் பிடித்துத் தருபவர்க்கு ஐம்பதினாயிரம் பவுன் இனாம் கொடுப்பதாக சீன மஞ்சுராஜ வாசத்தாரால் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. ஈவுண்டு லீயோ டால்ஸ்டாய் ருஷியாவினின்றும் துரத்தப்பட்டார். இங்கிலாந்தின் சிறந்த கதாசிரியனாகிய வில்லியம ரெய்னால்டு இங்கிலாந்திலிருந்து வெளியேற்றப்பட்டு பிரான்ஸ் தேசத்திலிருந்து தமது நூல்களை வெளியிடும்படியாயிற்று. இத்தனையும் இவர்கள் செய்த தப்பிதமென்னே? உண்மையுள்ளவர்களென்றும் பக்ஷபாதமில்லாத நியாயஸ்தர்களென்றும் ஓர் சாரார்கூற மற்றோர் சாராரோ இவர்கள் புறங்கூறுகிறவர்களென்றும் உதாசீனக்காரர்களென்றும் ஏற்பட்ட பொது ஸ்தாபனங்களையும அதிகாரிகளையும் மதியாதவர்களென்றும் கூறுகிறார்கள். இவ்விதப் போராட்டம் ராஜீயத்துறையிலும் மார்க்கத்துறையிலும் நாளும் நடந்து கொண்டேயிருக்கிறது. கிறிஸ்தவ கிராமங்களில் இப்போராட்டம் ஓரளவு ஏற்படத் தொடங்கியிருக்கிறது. ஆதலின் நாடாரான கிறிஸ்தவர்களின் பொருட்டு இவ்வியாசத்தைத் தொகுத்து எழுத அனுமதி கிடைக்கவேண்டுகிறேன்.

ஓர் கிறிஸ்தவன்.

---

## அருப்புக்கோட்டை ஸ்ரீமான் மு. மு. மு. வாசகசாலை.

இதனருகாவில் 22—4—27 ல் வாசகசாலை ஹாலில் இரவு 10 மணிக்கு ஸ்ரீமான் சி. ச. மலையரச நாடார் அவர்கள் தலைமையின் கீழ் தர்க்க சங்கம் ஒன்று நடைபெற்றது. கடவுள் வணக்கம் சுப்பிரமணியனால் பாடப் பெற்றது. "சாத்வீகமே" சாலச் சிறந்ததென ஸ்ரீமான்களான அ. பெ. ரத்தினவேல் நாடார், செ. ஆ. சொக்கலிங்க பாண்டியர், திரு. பெ. திருமேனிநாதர், சிவ. கு. சிவ சுப்பிரமணியன், ரு. ஆ. மூத்து நாடார் இவர்கள் உபந்நியாசித்தார்கள்.

"பலாத்காரமே" மேலானதென பலபல உதாரணங்களைச்சுட்டிக்காட்டி ஸ்ரீமான்களான ஆ. இ. அண்ணாமலை நாடார், தி. கருப்பையா பிள்ளை, அ. கு. அண்ணாமலை நாடார் இவர்கள் உபந்நியாசித்தார்கள். அதன் பின் அக்கிராசனர் முடிவுரை கூறினர். தலைவர் அவர்களுக்கும், விஜயம் செய்தவர்களுக்கும் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்ததென காரியதரிசி எழுதுகிறார்.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# அகில இந்திய ஹிந்து மகாசபையில் டாக்டர் மூஞ்சேயின் பிரசங்கம்.

[பாட்னாவில் கூடிய அகில இந்திய ஹிந்துமகா சபையில் அக்கிராசனம் வகித்த டாக்டர் மூஞ்சே அவர்கள் பின்வருமாறு பேசினார்கள்.]

முகமதியர்கள் வங்காளத்தில் மிகச் சிறுபான்மையோராக விருந்தாலும் இப்பொழுது தக்கபடி பெரும்பான்மையோராக விருக்குமாறு செய்துகொண்டு விட்டார். இம்மாதிரி மதம் மாறிய ஹிந்துக்கள் இஸ்லாத்தினின்று மீண்டும் ஹிந்து மதத்திற்கு வருவதாக விருந்தால் அவர்கள் விஷயத்தில் மற்ற ஹிந்துக்கள் சற்று தாராள நோக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். ஸ்திரீகள் அவர்கள் இஷ்டத்திற்கு விரோதமாக கொடுமையாக நடத்தப்பட்டிருந்தாலும் அவ்விஷயத்திலும் தாராளமாக நடந்து கொள்ள வேண்டும். தீண்டத்தகாதவர்களென்பவர்களை இன்னும் அதிக ஜீவகாருண்யத்துடனும் நல்லெண்ணத்துடனும் நடத்த வேண்டும். தீண்டத்தகாதவர்களை உயர் வகுப்பு ஹிந்துக்கள் கேவலமாக நடத்துவதன் பயனாக முகம்மதியர் ஜனத்தொகை அதிகரித்து வருகிறது. இந்தியாவிலேயே யிருந்து வரும் ஒரு முக்கிய வகுப்பினர் ஹிந்துக்களை நசுக்கப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது ஹிந்துக்கள் ஒருநாளும் பிரிட்டிஷ் ஆட்சியை அசைக்க முடியாது. அவர்களால் சுயராஜ்யம் பெறமுடியாது. என்றாலும் அதைக் காப்பாற்ற முடியாது. ஒரு காபிரை இஸ்லாத்திற்கு மாற்றினால் கூட எவ்வளவோ மேன்மையுண்டென்ற ஒரு எண்ணத்தை முகம்மதியர்களுக்குள் உண்டுபண்ணி பல ஹிந்துக்கள் இஸ்லாத்திற்கு மாற்றப்படுகின்றனர். ஹிந்துக்களின் ஜனத்தொகையில் இவ்விதம் குறைவேற்பட்டு வருவதைத் தடுக்க ஹிந்துக்கள் என்ன செய்திருக்கின்றனரென்று நான் கேட்கிறேன்.

## தீண்டாமை விலக்கு.

தீண்டாமை விஷயத்தைச் சற்று பரிசீலனை செய்வோம். தீண்டாமை என்பது இருவகைப்படும். சுகாதார காரணங்களுக்காக குறுகிய காலத்திற்குத் தீண்டாமை யிருப்பது ஒரு வகை. பரம்பரையாக வரும் தீண்டாமை மற்றொருவகை. இந்த பரம்பரை தீண்டாமைதான் நமக்கு உபத்திரவத்தை உண்டுபண்ணுகிறது. இவ்விதம் நமது சமூகத்தில் தாழ்த்தப்பட்டிருப்பவர்களை இஸ்லாத்தில் சேர்ப்பது அவர்களுக்கு மிகவும் சௌகரியமாக யிருக்கிறது. தர்ம சாஸ்திரங்களை ஆலோசனை செய்து நான் பார்த்ததில் ஜாதி வித்தியாசங்களையாவது, தீண்டாமையையாவது நாம் வைத்திருக்கத் தேவையில்லையென்றே என் புத்திக்குப்படுகிறது.

## ஹிந்து சமூக சீர்திருத்தம்.

ஹிந்து சமூகத்தைச் சரிவரத் திருத்தியமைக்க வேண்டுவது மிகவும் அவசியமாகிறது. கடல் பிரயாணம், விவாஹம், சமபந்தி போஜனம் முதலியவற்றின் தடைகளை முதலில் நிவர்த்திக்க வேண்டும். கல்வியினாலும் அறிவுப் பெருக்கினாலும் தாழ்ந்தவர் கூட மேன்மை யடையக்கூடும். ஹிந்துக்கள் சுத்தி ஸங்காதன் இயக்கங்களை ஆதரிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இவற்றினால்தான் நாம் பிளவு படாமல் நமது லக்ஷியத்தைப் பெறக்கூடும்.

## ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையும், சுயராஜ்யமும்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை ஒரு பெரிய விஷயமாக விருக்கிறது. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையேயில்லாவிட்டால் சுயராஜ்யம் கிடைப்பது அரிதென்று ஹிந்துக்கள் சொல்ல வாரம்பிப்பதனால் ஒற்றுமையென்பது ஏதோ பேரம் செய்யக் கூடிய பதார்த்தமாய்த் தோற்றுகிறது. பேரமென்றால் கிராக்கிக்குத் தகுந்த விலையல்லவோ கொடுக்க வேண்டியதாகும். முஸ்லிம்கள் ஒற்றுமையிலிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றுதான். அவர்கள் அதைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை. இவ்விஷயத்தையே வேறொரு தன்மையில் நாம் கவனிப்போம். ஹிந்துக்கள் 23 கோடி யிருக்கின்றனர். முகம்மதியர்கள் 7 கோடி யிருக்கின்றனர். இவர்கள் இருவரையும் அடக்கி ஆண்டு வருபவர்கள் 5 கோடி யிருக்கின்றனர். அதுவும் 5000 மைல்களுக்கப்பாலிருக்கின்றனர். அவர்கள் உலகெல்லாம் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்துவிட்டனர். அப்படியிருந்தும், ஹிந்துக்கள் ஏழு கோடி முகம்மதியர்கள் சேராவிட்டால் சுயராஜ்யம் வராதென நினைக்கின்றனர். தனித்தனியே பார்க்கும்பொழுது ஒரு இந்தியன் சரீர தாட்டியம், புத்திவன்மை, வியாபார சூக்ஷ்மம் ஆகிய விஷயங்களில் ஒரு பிரிட்டிஷாருக்கு எவ்விதத்திலும் குறைந்தவனல்ல. ஆனால், பிரிட்டிஷாருக்குள் அதிகக் கட்டுப்பாடிருப்பதனால் அவர்கள் வலுவுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். ஹிந்துக்களில் பிளவுதான் அதிகரித்திருக்கிறது. நமக்குள்ளாக ஒற்றுமையும் சீர்பாடும் ஏற்பட்டு அதனால் நாம் பெறும் சுயராஜ்யம் தான் ஸ்திரமாக விருக்கக்கூடும். ஆகவே, ஹிந்துவுக்கு ஸங்காதன் சக்தியிலேயே சுயராஜ்யமிருப்பதாக நினைக்க வேண்டும். இக்காரியங்களை ஊக்கமாக நிறைவேற்றினால் சுயராஜ்யம் கிட்டுமென்பதில் சந்தேகமில்லை. அம்மாதிரி சுயராஜ்யத்தைக் கொண்டு நாம் பெருமைப்படவும் இடமேற்படும்.

மற்றொரு உத்தேசத்துடனும் இவ்விஷயத்தை நாம் பரிசிலனை செய்யலாம். சுயராஜ்யப் போராட்டம் பிருதிவிராஜன் தோல்வியுற்ற தினத்திலிருந்தே ஆரம்பமாயிருக்கிறது. சுயராஜ்யம்பெற ஹிந்துக்கள் பல யுத்தங்கள் புரிந்து கடைசியில் கிடைத்த பின்னர் ஒன்று அவர்கள் ஸங்காதனையும் யுத்தத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும், அல்லது சுகவாழ்வு நடத்த வேண்டுமென்று சொல்லப்பட்டது. சுகத்தை விரும்பியவர்கள் முஸ்லீம்களாகமாறித் தங்களுக்கு முகமது நபிகளிடமிருந்து ஸாக்ஷாத்தாகச் சம்பந்தம் வருவதாகவும் எல்லா மதங்களும் ஒரே லக்ஷியத்தைத்தான் உடையதென்றும் வெகுவாகப் பேசவாரம்பித்து விட்டனர். தன்மதிப்பு தன் மதத்தையும் பாராட்டியவர்களான ஹிந்துக்கள் தங்கள் உறுதியினால் உயிரையும் மானத்தையுங் கூடத் தியாகஞ் செய்தனர். ராணா பிரதாப், குரு கோவிந்தஸிங், ஸிவாஜி ஆகிய மகான்கள் பின் கூறப்பட்ட கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையின்றி சுயராஜ்யம் சாத்தியமில்லையென்று சொல்பவர்களுக்கு நான் ஒரு பதில் கூறுகிறேன். ஒற்றுமைக்கான மார்க்கத்தில் இரு சந்துகளிருக்கின்றன. ஒருவழியில் சுகமும் போகமும் இருக்கின்றன. மற்றொன்றில் துக்கமும் கஷ்டமுமிருக்கின்றன. கஷ்டமான பாதையைவிட்டு உடனேயும் சாச்வதமாகவும் சுயராஜ்யம் பெறவேண்டுமானால் எல்லா ஹிந்துக்களும் இஸ்லாத்திலேயே சேர்ந்துவிடலாம். அப்படியல்லாமல் நம்பெரியோர்கள் பின்பற்றிய வழிகளை நாம் அநுசரிப்பதென்றால் சுத்தி ஸங்காதன் இயக்கங்களை நாம் வலுக்கச் செய்யவேண்டும். வைதிக நிர்ப்பந்தங்களைச் சற்று தளர்த்தி தாராள உணர்ச்சியை யுண்டுபண்ணுவதுதான் ஹிந்து மதத்தை ஒன்றுபடுத்தச் சரியான மார்க்கமாகும்.

## முஸ்லீம் நிபந்தனைகள்.

முஸ்லீம்களின் நிபந்தனைகளுக்கு ஹிந்துக்கள் பதில் கூறவேண்டியதாக விருக்கிறது. நான் சம்பந்தப்பட்ட வரையில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை யுண்டுபண்ணுவதற்காக ஒப்பந்தங்களினாலும், விட்டுக்கொடுப்பதாலும் நன்மையேற்படாதென்பதே என்னுடைய நிச்சயமான எண்ணம். கவர்ன்மெண்டு நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரையில் நேர்மையான சட்டங்கள் செய்துகொள்ள வேண்டும். மற்றப்படி கவர்ன்மெண்டு வேலைகள் முதலியவை சுதந்திரமான போட்டியினாலேயே தீர்மானமாக வேண்டும். போட்டியில் தேறித் தகுதியை மெய்ப்பித்துக்கொண்டால் அவர்கள் பதவியையடையட்டும். அவ்விதம் யோக்கியதையில்லாதவர்கள் யோக்கியதை பெறும்வரையில் ஒதுங்கியிருக்க வேண்டும். சட்டசபை முதலிய தேர்ந்தெடுக்கப்படும் ஸ்தாபனங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமுறை யேற்படுத்துவதென்ற எண்ணத்தைக்கூட நான் சகிக்கமாட்டேன். யோக்கியதையிருந்தால் எவ்வளவு சிறுபான்மையாகவிருந்தாலும் அந்த வகுப்பிற்குக் கவர்ன்மெண்டு நிர்வாகத்திற் தகுந்த பங்கு இல்லாமல் போகவில்லை. கிறிஸ்தவர்களையும், பார்விகர்களையும் இதற்கு நான் உதாரணமாகக் கூறுகிறேன். முகம்மதியர்களும் ஏன் அவ்விதம் செய்யக்கூடாது? ஹிந்துக்கள் பெரும்பாலோராக விருந்து சிறுபான்மையோர் விஷயத்தில் அக்கிரமஞ் செய்திருக்கிறார்களென இந்தியச் சரித்திரத்தில் ஒரு காலத்திலாவது சொல்லமுடியாது. ஆனால் முகம்மதியர்கள்தான் மலையாளம், கோஹாத், கிழ் வங்காளம், லார்க்கானா, முதலிய விடங்களில் ஹிந்துக்கள் விஷயத்தில் மிக்க கொடுமையாக நடந்துகொண்டிருக்கின்றனர். நாமும் வாழ்வோம்; பிறரும் வாழட்டுமென்ற எண்ணத்துடனேயே ஹிந்துக்கள் இதுவரையில் இருந்து வந்திருக்கின்றனர். ஆகையால்தான் வகுப்பு உணர்ச்சியைப் பெற வேண்டாமென்று ஹிந்துக்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். முஸ்லீம்கள் தங்கள் தற்கால ஸ்வபாவத்திலேயே அவர்கள் இஷ்டப்படி நடந்து கொள்ளட்டும். ஆனால் ஹிந்துக்கள் பெரும்பான்மையாக விருந்தாலும் சிறு பான்மையோரை நசுக்கப்போவதில்லையென்று மாத்திரம் நாம் உறுதி கூறிவிடவேண்டும்.

## இலங்கை வர்த்தமானம்.

(மனோகரன் எழுதுகிறார்.)

### ராயல் கமிஷன் நியமனம்.

இலங்கையின் புதிய சீர்திருத்த அமைப்பின் சட்டத்தின் பிரகாரம் சீர்திருத்தம் பல வழங்கும் பொருட்டு மீண்டும் "ராயல் கமிஷன்" ஒன்றை உறுவகப் படுத்தியிருக்கின்றார்கள். ஷை கமிஷன் கூடிய சீக்கிரம் இலங்கைக்கு விஜயம் செய்து பற்பலருடைய சாட்சியங்களையும் நேரிலறியுமாம். இக்கமிஷனுக்குத் தலைவராக மிஸ்டர் ஜே. எச். தாமஸ் அவர்களையே நியமனம் செய்வார்களென்றும் அவரும் அதை ஏற்றல்கூடுமென்றும் நம்பப்படுகிறது. இவர் தொழிலாளர் கவர்ன்மெண்டார் ஆட்சியின் போது குடியேற்ற நாட்டுமந்திரியாக இருந்தவர். இவர் உத்தியோக முறையில் குடியேற்ற நாடுகளின் விஷயங்களை அவ்வந்நாட்டின் அதிகாரவர்க்கத்தாரிடமிருந்து நன்கு அறிந்தவர். இம்முறையில் இலங்கையின் குறைநிறைகளைப்பற்றிய அனுபவமும் சிறிதிருத்தல்கூடும். ஆகவே இவர் நேரில் வந்து தம்மிடம் சாட்சியம் கொடுப்போர்களின் மனோபாவத்தையும் சீர்தூக்கிப்பார்த்து தாம் ஏற்கனவே அதிகார வர்க்கத்தவரிடமிருந்து அறிந்தவற்றிற்கும் சாட்சியங்களுக்கும் முள்ள ஏற்றத்தாழ்வை நிதானித்திருத்தல்கூடும். தொழிலாளர் பெரிதும் ஒன்றித்துழைக்கவேண்டிய இலங்கையில் தொழில் விஷயத்தில் நிபுணரான இவரின் வரவு நல்வரவாயிருக்குமென்றே நம்புகிறோம். ஆனால் தற்போது "கன்ஸர் வேடிவ்" கட்சியினரிடமே அரசாங்க அதிகாரமிருந்து வருகிறது. இம்முறையில் இவரே நியமனமாவாரென உறுதி கூறுவதற்குமில்லை. அப்படி நியமனஞ் செய்யினும், தொழிலாளர் நிரம்பிய இலங்கையை தொழிலாளரென்ற அவரையே கருவியாகக்கொண்டு ஏமாற்றவுங்கூடும். எவ்வெனினும் சரி தனது நாட்டிற்கும் ஜாதிக்கும் நஷ்டமேற்படவா பார்த்துக்கொண்டிருப்பர்; ஆகவே நாம் திடீரென ஏமாந்து விடுவதும்கூடாது. வெள்ளி வெளிச்சம் விடிந்தால் தெரியும். எனினும் இவர் தமது நாட்டினர் மத்தியில் நடந்துகொண்ட விதமிங்கும். நடந்து காட்டுவாரென நம்புகிறோம்.

மதுரை, நாடார் மகாஜனசங்க

அறிக்கை.

நாடார் குல மித்திரன்

# க்ஷேமநிதி லாட்டரி.

அபிமானிகளே !

நாடார்குலத்தின் முன்னேற்றத்திற்குப் பத்திரிகை அத்தியாவசியமென நம் கான்பரன்ஸ்களில் பிரமுகர்களால் பேசி நிறைவேறப் பெற்ற தீர்மானத்திற்கிணங்க நமது குல மித்திரன் தோன்றி நாளடைவில் உயர் நிலைக்கு வந்துளதென்பதை தாங்களறிந்ததே. அயர்விலிருந்த நம் ஜன சமூகத்தை தட்டி எழுப்பி உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஊட்டி உயர் பாதையில் மஹாஜன சங்கத்தின் நோக்கத்தை மேற்கொண்டு நடத்திச்செல்லும் நமது மித்திரனுக்கு க்ஷேமநிதி இன்றியமையாததென்பதைக் கண்டு லாட்டரி ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறது.

மித்திரன் முன்னேற்றமே நாடார் ஜன சமூகத்தின் முன்னேற்றம். ஆதலால் ஒவ்வொருவரும் லாட்டரிச்சீட்டை பெற்று அதிஷ்டமடைவதோடு ஏராளமான புத்தகங்கள் விற்றுக்கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பிரைஸ் எடுக்கும் 4-5-27 சமீபமாக இருப்பதால், அன்று பிரைஸ் எடுப்பதற்கனுசரணையாக சீட்டுப் புஸ்தகங்கள் பெற்றுக் கொண்டிருப்பவர்கள் உடனே அடிக்கட்டைகளையும் ரூபாய்களையும் அனுப்பி லாட்டரியை வெற்றிபெறச் செய்யும்படி வேண்டிக்கொள்கிறோம்.

பா. ம. பாண்டியநாடார்
ஆ. அ. ஆறுமுகநாடார்
காரியதரிசிகள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## சீனுவின் சமீப கால சரித்திரச் சுருக்கம்.

சீனர்கள் நெடுமொன்று தங்கள் தேசத்திலுள்ள அந்நிய ஜாதியாரை வெளியேற்ற முயற்சி செய்கிறார்களென்றும், சீனர்களில் ஒரு வகுப்பாரோ அந்நியர்களுக்கு ஆதரவளித்து வருகின்றனரென்றும், ஆகவே அந்நியரின் பொருட்டு சுய தேசத்தவரோ டுளவுபட்டு ஒருவரோடொருவர் போராடி வருகின்றனரென்றும் கேள்விப்பட்டும், பலருக்கு இவ்விஷயங்கள் எவ்வித இன்பத்தையோ, துன்பத்தையோ விளைவிக்கக் கூடியதாயிருக்க முடியாது. ஆயினும் அத்தேசத்தின் சுமார் பத்து அல்லது இருபது வருஷச் சரித்திரக் குறிப்புகள் சில ஞாபகத்துள்ளவர்க்கு இவ்விஷயம் மிகுசிந்தனைக்கிடமானதாகவே யிருக்கும். இது பற்றி அச்சரித்திரக் குறிப்புகளில் தற்கால சம்பவங்களுக்கு நெருங்கிய சம்பந்தமுடைய சிலவற்றை இங்கு குறிப்பிடுவோம்.

ஐரோப்பாக் கண்டமானது சிறிய பூ பாகமாகும், ஜனங்களின் அவசியமான தேவைக்குத் தகுந்த உணவுப் பொருள்களையாவது வியாபார சம்பந்தமான தாதுப் பொருள்களையாவது உற்பத்தி செய்து கொடுப்பதாயில்லை. இதன் பொருட்டே அக்கண்டமானது புதிய உலகங்களையும், தேசங்களையும் கண்டு பிடிக்கும்படியான வாஸ்கோடிகாமா, கொலம்பஸ் முதலிய கடலோடிகளைப் பெற்றெடுக்கும் பாக்கியம் பெறுவதாயிற்று. ஆகவே சீனர்கள் தங்கள் தேசம் தேவர் பூமியென்றும், எவரும் தம் தேசத்துக்குள் வர முடியாதென்றும், வருபவர்கள் பிசாசுகள் என்றும், அவர்களைக் கொன்று விடுவது நீதி யென்றும் நினைத்துப் பல்லாண்டுகளைக் கழித்து வந்த போதிலும் ஐரோப்பிய ஆராய்ச்சிக்காரருடைய கவனத்தினின்றும் இத்தேசம் தப்பித்துக் கொள்ள முடியவில்லை. ஆயினும் முதலாவது யார் உள்ளே போவது என்ற ஓர் கேள்வியே பிறந்தது. மனிதரைப் பிடித்துத் தின்னும் மிலேச்சருக்கும் உபதேசம் செய்விக்க முற்பட்டுச் செல்லும் மிஷனெரிகளே இப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். மிஷனெரிகளைப் பிசாசுகள் என்று நினைத்து கல்லெறியவும், கொல்லவும் சீனர்கள் ஏற்பட்டார்கள். பீரங்கிகளும், யுத்தக் கப்பல்களும், காலாட் படைகளும் பின் சென்று சீன ராஜாவைப் பயமுறுத்திப் பெரிய தொகையை நஷ்டமாகவும், சில பூமிகளை அந்நியரின் வசதிக்காகவும், குடியிருப்புக்காகவும் பெற்றுக் கொண்டார்கள்.

சீனுவின் பட்டு நூல் வியாபாரத்தை மூங்கில் குழாயில் அடைத்துக் கொண்டு போய் உலகெல்லாம் பரப்பிய மிஷனெரிகள் சீனுவின் தற்கால குழப்படியான நிலைமைக்கு அடிகோலி வைத்தார்கள் போலும் இவ்விஷயங்களை பல முறை திரும்பத் திரும்ப ஏற்பட்டு திரும்பத் திரும்ப அந்நிய ஜாதியாருக்குப் பெரிய நாடுகளையும், வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதாயிற்று. வெள்ளையர்களை எதிர்த்துப் போராட முடியாதென்று தெரிந்து கொண்ட ராஜ வம்சத்தவரோ ஐரோப்பியர்களோடு அதிக சிநேகத் தன்மையுடன் பழகி சீனர்களைக் கொடுமையாய் ஆண்டு வந்தனர். இது விஷயமாய் ஜனங்களுள் ஏற்பட்ட பல கிளர்ச்சிகள் தவறிப்போன போதிலும் 1911 ம் ஞு ஏற்பட்ட கிளர்ச்சியானது சித்தி பெற்று கிளர்ச்சிக்காரரின் தலைவரான சன் எற்சென் என்பவர் சீன ராஜ்யத்தைக் கைப்பற்றி பல்லாண்டுகளாக ஆண்டு வந்த மஞ்சு வம்சத்தவரை வலிய பட்டத்தைத் துறக்கச் செய்து அதன் ஸ்தானத்தில் தாமே சீனுக் குடியரசின் முதல் பிரசிடெண்டாக அபிஷேகம் செய்து வைக்கப்பட்டார். இப்பெரியார் அத்தேசத்துக்காகப் பட்டபாடும் உழைப்பும் பெருஞ் சரித்திரமாகுமெனவே ஈண்டு பிரஸ்தாபியாது விடுவோம். ஆயினும் அவர் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து இங்கிலீஷ் மிஷனெரி பாடசாலை யொன்றில் படித்து சிறிது இங்கிலீஷ் வைத்தியம் கற்றுக் கொண்டவரும், இங்கிலீஷ் பாஷையை நல்ல நடையில் பேசவும் கூடியவர் என்பதை மாத்திரம் சொல்வோம். ஆகவே தமது பிறப்பை உத்தேசித்து சீன ராஜ வம்சத்தவருடன் அபிப்பிராய பேதப்பட்டு சேனாதிபதி வேலையினின்று நீக்கப்பட்டவரும், சன்எற்செனுடு யுத்தம் நடந்த போது அரசு ராஜ வம்சத்தவர் உதவிக் கழைத்தும் அவ்வழைப்பை மறுத்தவரும், ஐரோப்பிய தேசங்களில் கல்வி பயின்றவருமான யுவான் ஷிகே என்னும் பெரியார் ஒருவரைக் கலந்து தம்முடைய பிரசிடெண்டு பதவியை அவருக்கே மனோசியாய் மாற்றிக் கொடுத்து அவ்வண்ணமே பட்டமும் சூட்டி வைத்தார். இத்துடன சன் எற்சென் சுமார் 25 வருஷ காலமாய் பாடுபட்டுச் சம்பாதித்த ஓர் பெரிய சுயாதீனத்தை இழந்து போனார் என்றே சொல்லும்படியான மாறுதலேற்பட்டு விட்டது.

யுவான்ஷிகே நல்லவராயிருந்தாலும் ராஜ குடும்பத்தவரிடமும், ஐரோப்பிய வல்லரசுகளிடமும் அதிகப் பற்றுடையவர். தவிரவும் குடியரசை விட மன்னராட்சி முறையை விரும்பும் இயற்கையுடையவர். எனவே கூடிய சீக்கிரம் சர்வ தேசங்களும் யுவான் ஷிகேயின் குடியரசையும், அவரது பிரசிடெண்டு ஸ்தானத்தையும் அங்கீகரித்துக் கொண்டு தத்தம் ஸ்தானாபதிகளை பீக்கிங் நகருக்கனுப்பி வைத்து காரியாலயங்களையும் ஏற்படுத்திக் கொண்டனர்.

சன்எற்சென் கொலை செய்யப்படுவாரோ என்ற பயமும் மறுபடி உண்டாயிற்று. எனவே சன்எற்சென் தமது சொற்ப சகாக்களுடன் தென் ஓரமானதும் இங்கிலாந்தின் ஸ்தாபனமுமாகிய கான்றன் மாகாணத்தில் ஓர் சிறிய கவர்ன்மெண்டு நடாத்தித் தமது கொள்கையைப் பரப்புவதில் தமது சுய தேசத்தவரும், ஐரோப்பிய தேசத்தவரும் சேர்ந்து செய்யும் கொடுமையையும், தமது பல வருஷ உழைப்பு வீண் போனதையும் நினைத்து நொந்து இரண்டு வருஷங்களுக்கு முன் காலஞ் சென்று விட்டார். இவ்வித நிலைமையில் கான்றனிலுள்ள அவரது சிஷ்யர்களுக்கு ருஷியாவின் உதவியும், ஜப்பானின் நடு நிலைமையும் பூர்வித உற்சாகத்தை உண்டு பண்ணி தங்கள் குருவான சன் எற்சென் விட்டுப் போன வேலையை ஆரம்பித்து விட்டிருக்கிறார்கள். அந்நியர்கள் உள்ளிருக்கும் வரை தங்களுக்குள் ஒற்றுமை உண்டாவது கூடியதல்ல வென்பதும், பூர்வீகத்தில் பிராமணருக்கும் சூத்திரருக்கும் எவ்வளவு வித்தியாசமான சட்டங்கள் ஏற்பட்டிருந்தனவோ அவ்விதமே சீனர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் வெவ்வேறு விதமான சட்டங்கள் ஏற்பட்டிருப்பதும் தங்களுக்குப் பெரிய அபிமான மென்று சீனர்கள் உணர்ந்திருப்பதும் இக்கிளர்ச்சிக்குக் காரண காரியங்களாகும். எனவே ஐரோப்பிய வல்லரசுகள் தாங்கள் ஏற்கனவே அங்கீகரித்துள்ள பீக்கிங் கவர்ன்மெண்டை நிராகரித்து, கான்றனிலுள்ள சன்எற்சென் சிஷ்யர்களுடைய கவர்ன்மெண்டை ஒப்புக்கொள்ளும் வரை சீனப் போராட்டம் நீடித்திருக்கும்.

D. B. S.

## "மித்திரன்" லாட்டரிச்சீட்டு.

(நண்பன் எழுதியது)

எல்லாம்வல்ல இறைவனது திருவருளால் ஆக்கப்பெற்ற இவ்வுலகில் மாந்தர் கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் பெற்று வாழ்ந்து இறுதியில் இறைவனது இன்பவீட்டை யடைய வேணுமாயின் அவர்களுக்குப் பத்திரிகைத்துணை இன்றியமையாததென்பதே பெரியோர்களின் கொள்கை.

தற்சமயம் இவ்வுலகில் முற்போக்கடைந்திருக்கும் எந்த தேசத்தை எடுத்துக்கொண்டாலும் அந்த தேசம் முற்போக்கடைந்திருப்பதற்கு முக்கியகாரணம் பத்திரிகையே. நம்மவரு ளை இந்தியாவில் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் ஏற்பட்டு ஆதரிப்பாரின்றி நின்று போயிருக்கின்றன. இது நிற்க நம்குலத்திற் கேற்பட்ட பத்திரிகைகள் அனந்தம். அவைகளில் நின்றது போக நடந்து கொண்டிருப்பது நாடார்குல மித்திரனும், நாடார் நண்பனுமே. நடந்து கொண்டிருக்கும் பத்திரிகைகளுக்கும் பணக்கஷ்டம் சொல்லிமுடியாது. நேரில் பார்த்தவர்களுக்கே நன்கு விளங்கும். நம் குலத்திற்காகப்பாடுபடும் நாடார்குல மித்திரனும் அதன் ஆசிரியர் ஸ்ரீமான் முத்துநாடாரவர்களும் படும் கஷ்டம் இங்கு எழுதத்தரமன்று. நாம் ஒரு சமயம் பத்திரிகை ஆபீசுக்குச் சென்றிருந்தபொழுது இனி மித்திரன் வெளிவருமாவென்று சந்தேகப்பட்ட காலமுமுண்டு. அவ்வளவு கஷ்டங்களையும் மித்திரன் ஆசிரியர் சகித்துக்கொண்டு இன்றுவரை பத்திரிகையை வெளியிட்டுக்கொண்டிருப்பது அவரின் திறமையையும் விடாமுயற்சியையுமே காட்டுகிறது. இவ்வித உழைப்பாளரான ஒரு ஆசிரியரை ஈசன நமக்கீந்ததற்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எதற்கும் ஓர் அளவுண்டு; ஆகவே ஆசிரியர் இனிப் பணமில்லாவிடில் பத்திரிகை நடத்த முடியாதென்றெண்ணி தற்காலத்திற்கும் பிற்காலத்திற்கும் மித்திரனுக்கு உபயோகமாகும்படியான பண்டு ஒன்றை ஏற்படுத்தக்கருதி ஓர் லாட்டரியை ஆரம்பித்திருக்கிறார்கள். இவ்வளவு தூரம் நமக்காகப் பாடுபட்டு ஏற்படுத்தியிருக்கும் இந்த லாட்டரியை வெற்றியுடன் முடித்து வைக்கவேண்டிய பொறுப்பு நம்முடையதென்பது நான் சொல்லாமலே விளங்கும். லாட்டரிச் சீட்டு வாங்குவோர்க்கும் தக்க இலாபம் கிடைக்கும் முறையில் பிரைஸ் தொகைகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. ஆகையால் எல்லா அன்பர்களும் தங்களால் இயன்ற அளவு அதிகப்படி சீட்டுகள் வாங்கி, நம் மித்திரன் லாட்டரியை வெற்றியுடன் முடிக்கவேண்டுமாய் எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம். சுபம்!

## இலங்கையில் புதிய போஷகப் பிரபுக்கள்.

ஸ்ரீமான் ஜே. எஸ். தானியேல்நாடார் அவர்கள் (இடையன்குடி)

" சி. கூ. சவரிமுத்துநாடார் அவர்கள் (வடக்கன்குளம்)

" பி. ஞா. அ. அந்தோணிநாடார் அவர்கள் (கள்ளிகுளம்)

" கோ. மா. அமிர்தநாடார் அவர்கள் (காவல்கிணறு)

" அ. சு. மிக்கேல்நாடார் அவர்கள் (கள்ளிகுளம்)

## மதிப்புரை.

### குலசேகர பாண்டியன்.

இத்தமிழ்நாவல் இரண்டு நமது பார்வைக்குக் கிடைத்தன. இந்நாவல் மக்கள் மனதில் காதலையெழுப்பி கஷ்டத்தை விளைவிக்கும் போலிநாவல்களைப் போலின்றி தேசத்தின் புனருத்தாரணத்தின் ஆசையை எழுப்பும் அருமையான நாவலென்றே நவிலலாம்.

பெரும் புகழ்கொண்ட தமிழ் நாட்டின் பெருமை பழந்தமிழ் நூற்களில் பரந்து கிடக்கக்காண்கின்றோம். ஆயினும் சாதாரண ஜனங்களும் தற்கால ரீதியில் சுலபமாக அறியும் வண்ணம் அந்நூற்களில்லை என்ற நோக்கத்தாலும் தேசாபிமான உணர்ச்சியாலும் செந்தமிழ் நாட்டின் முந்தைய கால் வழக்க ஒழுக்கங்களை தழுவிப் புராதன பாண்டிய தேசத்தின் மத்திய காலச்சரித்திரத்தை யொட்டி இக்கதை எழுதப்பெற்றிருக்கிறது. இக்காலத்தில் இத்தகைய கதைகளே நம்மக்களுக்கு அதிகம் தேவை.

கலியுகத்தில் க்ஷத்திரியன் இல்லை என்று ஒரு சார்பார் கூறுவது போல் இக்கதையின் முடிவைப் பெரும்போக்காய் வாசிப்போர் மனதில் பூர்வ பாண்டிய வம்சமே அற்றுப்போனதாக நினைக்கக்கூடும். ஆசிரியர் கருத்து அதுவாயிருக்காதென்றே நம்புகின்றோம். கடைசியாக ஆண்ட அரசன் அழிந்தானே அன்றி அவன் வம்சம் அழியவில்லை. இன்றும் தென்னாட்டிலுள்ள பூர்வ பாண்டிய வம்சத்தார் பாண்டிய குலாசாரம் ஒருவாறு தவறாமல் பலபாகங்களிலும் கூட்டங் கூட்டமாக வாழ்ந்து வருகிறார்களென்பதை வாசகர்கள் அறியவேண்டும். கடைசியாக ராஜ்யபாரம் நீங்குவதற்குக் காரணம் அவர்களின் தவறுதலான கட்டுப்பாடுகளினாலென்று குறிப்பிட்டிருப்பதை ஒப்புக்கொள்ளவே வேண்டும். புதுமையான காலச்சக்கரம் பழமையைத் தள்ளி விட்டது. ஆனால் சக்கரம் மறுசுற்று வட்டத்தில் பழமையே புது வடிவமாய்க் காணக்கூடுமென்பதற்கு இது போன்ற பூர்வ சரித்திரங்கள் நல்ல சாட்சியே முன்னறிவிப்பென்று கொள்ளலாம். இதன் விலை அணா 3.

விலாசம்:-

அலோர் ஸ்டார் கிட்டா,

பினங்கு மார்க்கம்.

### கலா சிந்தாமணி.

இது ஒரு மாதச் சஞ்சிகை. 16 பக்கம் கொண்ட முதலிதழ் ஒன்று நமது பார்வைக்குக் கிடைக்கப்பெற்றோம். தொடர்பான பல விஷயங்களால் நிரம்பப் பெற்றது. வருட சந்தா ரூ 3. வேண்டுவோர் கீழ்கண்ட விலாசதாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கலா சிந்தாமணி நிலையம்,

மயிலாப்பூர், சென்னை.

### பிரபவ ஞு பஞ்சாங்கம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் சோதிட பரிபாலன மடத்திலிருந்து தமிழ் புது வருடப் பஞ்சாங்கம் ஒன்று வரப்பெற்றோம். சோதிடக் குறிப்புகள் நிறைந்த சிறந்த பஞ்சாங்கங்களில் இது தலை சிறந்த தொன்றென்பதை யாவருமறிவர். உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 94 பக்கங்களுடன் நல்ல மாதிரியில் வெளியிடப்பட்டிருக்கிறது. இத்தகைய பஞ்சாங்கம் தமிழகம் ஒவ்வொன்றிலும் இருக்க வேண்டிய அவசியம். கீழ்கண்ட விலாசத்திற் கிடைக்கும்.

இ. சி. இரகுநாதையர்,

சோதிடபரிபாலன மடம்,

கொக்குவில் P-o,

யாழ்ப்பாணம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## உலகில் பணம் பெருத்த வீதி.

தற்போது உலகிலேயே பணம் பெருத்த வீதி நியூயார்க் நகரிலுள்ள பார்க் அவென்யூ என்று "டெய்லி நியூஸ்" பத்திரிகை கூறுகிறது. இவ்வீதியில் வருஷம் பத்தாயிரம் பவுன் (ரூ1,35,000) வருவாயுள்ளவன் ஏழையென்று கருதப்படுகிறான்! இவ்வீதியில் 4000 செல்வர் குடும்பங்கள் வசிக்கின்றன, இவர்கள் வருஷத்தில் மொத்தம் 5 கோடி 60 லட்சம் பவுன் செலவு செய்கிறார்கள் பூவில் மட்டும் தினந்தோறும் 2500 பவுன் செலவாகிறது, நடனங்கள் விருந்துகள் முதலியவற்றில் வருஷத்தில் பத்து லட்சம் பவுன் செலவு செய்யப்படுகிறது. பெண்களின் உடைக்கு தினம் 40,000 பவுன். வருஷம் 1 கோடி 40 லட்சம் பவுன் செலவழிக்கப்படுகிறது. எட்டு லட்சம் பவுனுக்குப் பாதரட்சைகள் வாங்கப்படுகின்றன. இவ்வீதியில் வசிப்போர் எல்லோருக்கும் சேர்ந்து உணவுக்காகச் செலவு 40 லட்சம் பவுன் தான் ஆகிறது. அதாவது உடைச் செலவைவிட மிகவும் குறைவு. பிரயாணத்தில் அவர்கள் 30 லட்சம் பவுன் செலவு செய்கிறார்கள். தர்மத்தில் 10 லட்சம் பவுன் செலவிடுகிறார்கள். தர்மத்தில் செலவழிப்பது அவர்களுடைய மொத்த வருவாயில் 100-க்கு 1 வீசமேயாகும்.

## சிறந்த கொடை.

பிகார், ஒரிஸ்ஸா மாகாண ஸ்தலஸ்தாபன மந்திரியாகிய கணேஷ் தத் சிங் என்பவர் இந்திய அநாதைச் சிறுவர்களைப் போஷித்து கல்வி கற்பித்து வேண்டிய சௌகரியம் செய்து கொடுக்கும் நோக்கம் கொண்டு தமது சம்பளத்தில் முக்கால் பாகத்தை மீதப்படுத்தி வந்தவகையில் சேர்ந்த ஒரு லக்ஷம் ரூபாயை அதற்கு ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.

---

கல்கத்தா ஊமையர்களுக்கும் செவிடர்களுக்கும் ஏற்படுத்தியுள்ள பள்ளிக் கட்டடத்துக்கு 20,000 ரூபாவும், அதன் பொது நிதிக்கு ஒரு லட்ச ரூபாவும் ராஜா பகதூர் சான்கால் நன் கொடையளித்துள்ளாராம்.

* *

சிறுவர் சிறுமிகளுக் கென்று தனியாகக் காட்டப்படும் சினிமாப் படக் காட்சிகளைத் தவிர, மற்றக் காட்சிகளுக்கு 18 வயதுக் குட்பட்டோர் செல்லலாகாதெனத் திருச்சி அரசாங்கத்தார் சட்டஞ் செய்துள்ளனர்.

* *

இந்தியச் சட்ட சபையின் தலைவரான ஸ்ரீமான் பட்டேல் சில தினங்களுக்கு முன் இங்கிலாந்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அவருக்குக் கதரில் அதிக நம்பிக்கையிருப்பதால் அவர் இங்கிலாந்திலும் கதராடையே தரித்து விளங்குவாராம்.

---

## புதிய ஸ்டாக்!
## விலை வெகுசகாயம்!!
## உடனே ஆர்டர் செய்யுங்கள்.

பாக்கட் வாச்.

| | ரூ. அ. |
|---|---|
| ரெயில்வே டைம்கீப்பர் | 3—0 |
| ரெயில்வே ரெகுலேட்டர் | 3—8 |
| ராஸ்கோப் ஸிஸ்டம் | 3—8 |
| நிக்கில் லீவர் 10 ஜியூல்ஸ் | 8—8 |
| ஷை 7 ஜியூல்ஸ் | 7—8 |
| 8 days நிக்கில் | 9—8 |

ரிஸ்ட் வாச்.

| | | |
|---|---|---|
| நிக்கில் ஸிலிண்டர் | ,, | 5—8 |
| வெள்ளி ஷை | ,, | 6—8 |
| ரோல்ட்கோல்ட் | ,, | 6—4 |
| நிக்கில் லீவர்ஸில்க் பட்டையுடன் | | 12-8 |
| வெள்ளி ஷை | | 15—8 |
| ரோல்ட் கோல்ட் ரிஸ்ட் | | 15—0 |
| 18 காரட் கோல்ட் | ,, | 25—0 |
| B. டைம்பீஸ் | | 2—0 |
| பிராட்வெஸ்ட் டைம்பீஸ் | | 3—12 |
| Westend co' s. B. டைம்பீஸ் | | 2—12 |
| அன்சோனியா B. டைம்பீஸ் | | 5—0 |
| ஷை அலாரம் | ,, | 4—8 |
| பிக்பென் அலாரம் | ,, | 9—8 |
| பேபிபென் | ,, | 10—0 |
| R. G. ரிஸ்ட்செயின் | | 3—8 |
| R. G. பக்கல் Silkstrap | | 2—8 |
| R. G. பாக்கெட் செயின் | | 6—8 |

பவுண்டன் பேனாக்கள்.

| | |
|---|---|
| வாட்டர் மென் | 7—0 |
| ஸ்வான் | 5—8 |
| ஹார்ட்வேர் | 2—8 |
| பினாக்பர்டு | 3—0 |
| ஒ மேக்கர் | 5—8 |
| எலக்டிரிக் பாக்கட் லாம்ப் | 1—4 |
| ஷை பெரிய லென்ஸ் | 1—8 |
| ஹாண்ட்லாம்ப் பெரிய லென்ஸ் | 1—8 |
| டார்ச் லாம்ப் பெரிய லென்ஸ் | 8—0 |

ராமநாத் & கோ,
தபாற் பெட்டி நெ 1248, சென்னை.

---

## தாய்மார்கள்
## கவனிக்க வேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேங்காய் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டு வருகிறது. 20 வருடத்து அனுபவம்; எம்மதஸ்தரும் வாங்கலாம். அனுப்பிக்கும் விதம் தேங்காயுடன் அனுப்பி வைக்கப்படும். இதன் விலை தபாற் செலவின்றி ரூ 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:— காத்துக்கருப்பு விஷயத்திற்கும், தேக சம்மந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:—

எ. எஸ். எ. மாந்தரீக டாக்டர்,
இனும்தார் வீடு,
சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம்,
திருச்சி.

---

## உடனே தேவை.

தமிழ் ஜில்லாக்களிலும் கொழும்பு, பினாங்கு, சிங்கப்பூர் பர்மா, இரங்கூன்முதலிய வெளி தேசங்களிலும் நமக்கு ஏஜெண்டுகள் தேவை. ஜெயமில்லாவிடில் பணம் வாபீஸ் என்ற கண்டிஷன் பேரில் நாம் விற்பனை செய்கிறோம். மற்ற விவரங்களுக்கு ஒரு அணா ஸ்டாம்பு வைத்து எழுதவும்:—

ஆர். சேஷன், எடிட்டர்,
ஸ்ரீரங்கம், (திருச்சி.)

---

## அவை எங்கே கிடைக்கும்?

அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான்
ரா. ஆ. முத்துநாடாரவர்கள் இயற்றிய
தென்னாட்டுப்புலி
**ஜெம்புலிங்கம் ஜீவிய சரித்திரம். (1)**
ஐரோப்பா யுத்தத்தில் அரும்பாடுபட்ட
**அவரியா நாடார் ஜீவிய சரித்திரம்.**
(சித்திரப் படங்களுடன் கூடியது.) (2)
திருமலையப்பபுரம் ஸ்ரீமான் பா. பி. இரத்தினபாண்டியர் இயற்றிய
**சௌந்தரகாந்தி நாவல். (3)**
சென்னை நாட்காசிரியர் ஸ்ரீமான் ச. சு. சங்கரலிங்க
நாடாரவர்கள் இயற்றிய
**நாடார் மகாஜன சங்க வாழ்க்கீர்த்தனை. (4)**

ஆகியவைகள் கீழ்க்கண்ட விலாசத்தில் கிடைக்கும். வாங்கிப்பயன் பெறுங்கள்.

"இரத்தின, விலாஸ்",
28 கிர். 1-வது குறுக்குத்தெரு,
கொழும்பு.

---

## மேகநிவாரணி சஞ்சீவி எண்ணை

(மேக ரோகங்களுக்கு கைகண்ட ஔஷதம்.)

இம்மேக எண்ணெய்யானது சுமார் 50-வருஷங்களுக்கு முன் ஒரு பெருத்த மஹானால் தயார் செய்யப்பட்டது. இந்த ஔஷதத்தினால் அநேக துயருறும் வியாதியஸ்தர்கள் எளிதில் சுகமடைந்திருக்கிறார்கள். தற்சமயம் பொதுஜன சௌகரியத்திற்காக இங்கு வெளியிடப்பட்டிருக்கிறது.

நீங்கும் வியாதிகள்:...மேகப்படைகள், மேகஊரல், பவுத்திரங்கள், சொறி, தேமல், சிரங்கு, படர்தாமரை, கண்டமாலை, வீதகவாய்வு, பாரிசவாய்வு, கைகால்முடக்கு, கைகால் வீக்கம், வெரைவாதம், நீர் வியாதி, வெள்ளை, இடுப்புவலி, ஆராதபுண்கள், மஞ்சள் காமாலை, தலைநோய், ஜுரம், வயிற்றில் ஜுரக்கட்டி ஸ்திரீ சம்மந்தப்பட்ட சகலரோகங்கள் முதலிய வியாதிகள் நீங்கி ரத்தம் சுத்தியாகி யாவரும் ஆச்சரியப்படும்படியாய் தேக பலமும், முகவசீகரமும் புத்திர சந்தானமும் உண்டாகும், உபயோகிக்கும் விதம் புட்டியுடன் காணலாம். இவை வீண் போலி விளம்பரம் என்று நினைக்கவேண்டாம்.

நாள்பட்ட வியாதிகளுக்கு 5 நாள் எண்ணெய் ரூபாய் 3
சாதாரண வியாதிகளுக்கு 3 நாள் எண்ணெய் ரூபாய் 2

சென்னை ராஜதானிக்கு சோல் ஏஜெண்டுகள்,

ஆர். கே பிரீடம் அண்டு கோ,
1/25 முல்லாசாயபு தெரு.
சௌக்கார்பேட்டை, மதராஸ்.

---

சென்னை, ச. க. சங்கரலிங்க நாடார் எழுதிய
சிறந்த செந்தமிழ் நாவல்

பார்க்கப் புதுமை! படிப்பதற் கினிமை!!

பவளப்பதுமை என்னும்

## மலையாளத்து மர்மம்.

நாவலிற் சிறந்த நாகரீக நாவல்
நாட்டிற் குகந்த நவீனக நாவல்
அற்புதக் கற்பித அதிசய நாவல்
சித்திரப் படங்கொண்ட செந்தமிழ் நாவல்
மானிடர்க்கேற்ற மனோகர நாவல்
புத்திபோதிக்கும் புதிய நாவல்

250 பக்கம். நான்கு சித்திரப்படங்கள்.
புத்தகம் 1-க்குவிலை ரூ 1—4—0. உடனேஎழுதுங்கள்.

விலாசம்:— மானேஜர்,
ரஞ்சித மனோகர புஸ்தகசாலை,
53. செட்டித்தெரு கொழும்பு.

---

## அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றிருக்கிறோம்.

# ஜோதிடம்.

ஒரு வருஷபலன்! ரூபாய் ஒன்றுதான்.

உங்களுடைய எதிர்காலபலனை அறிந்துகொள்ள விரும்புகின்றீர்களா? அப்படியானால்உங்களுடையஜெனனநட்சத்திரம்அல்லது பெயரை எழுதி அனுப்பினால் தற்சமயம் நடக்கும் 12 மாத பலன்கள் அதாவது:—உத்தியோகம், வியாபாரம், புத்திர சந்தானம், யோகம், விவாகப் பொருத்தம் முதலிய பலாபலன்களை எழுதி அனுப்பப்படும்.

சிற்றின்ப சாஸ்திரம் என்னும் புத்தகம் 1-க்கு விலை அணா 8. எமது விலாசம்:—

"ஜோதிடசாலை"
(நா) என்னூர் போஸ்டு, செங்கல்பட்டு ஜில்லா.

---

## தேவை.

நமது நாடார்மகாஜன சங்கத்திற்கு 3 பிரசாரகர்கள் தேவை. பிரசங்கம் செய்வதில் திறமையுள்ளவராய் இருக்கவேண்டும். ஆங்கிலப் பயிற்சியுமிருந்தால் மிகவும் நல்லது. விபரத்திற்கு காரியதரிசிகள், "நாடார்மகாஜன சங்கம்", 221. கீழமாசி வீதி, மதுரை என்ற விலாசத்திற் கெழுதவும்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection